தொகுதியிலே மாணவர்கள், நிறைய படித்த இளைஞர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பயன்பெறும் வகையிலே அமைச்சர் அவர்கள் இந்த திட்டத்தை மீண்டும் பரிசீலனை செய்து, அடுத்த ஆண்டிலாவது கொண்டு வர ஏற்பாடு செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. பெருமாள், நீங்கள் இந்தக் கேள்வியைக் கேட்கிற விதம் சரியல்ல. போக்கு வரத்துத் துறை அமைச்சர் அதிகமான பஸ்களை விட்டுக் கொண்டிருக்கிறார்; நீங்கள் இதைச் செய்வீர்களா என்று சொல்வது, அந்த இரண்டு அமைச்சர்களுக்கும் நீங்கள், ஏதோ அவர் செய்கிறார், நீங்கள் செய்யவில்லையா என்று கேட்பதைப் போலாகும். அதிகமான பஸ்கள் விடப்பட்டிருக்கின்றன; எனவே, இந்தத் தொழிற்கூடம் அமைக்கப்படுமா என்று அந்தக் கேள்வி அமைக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில் அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் 3 இருக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் 13 இருக்கின்றன. அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற்கல்விக் கூடங்கள் 6 இருக்கின்றன. அந்த மாவட்டத்தில், அங்குள்ள மலைவாழ் மக்களுக்கான பெர்சென்டேஜ் இன்னும் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இருக்கிறது. ஆகவே, அங்குள்ள அந்த வசதிகளையெல்லாம் அங்குள்ள இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 79, திரு. ப. கலியபெருமாள், மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர்.

79—

திருவையாறு தொகுதியில் மீனவர்களுக்கு வீடுகள்.

*10123—திரு. ப. கலியபெருமாள் :

மாண்புமிகு பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருவையாறு தொகுதியிலுள்ள தோகூர் திருவாலம் பொழில், அந்திலி போன்ற கிராமங்களில் வாழும் மீனவர்களுக்கு நிரந்தரமான குடியிருப்பு மனை வழங்கி, வீடு கட்டித்தர அரசு முன்வருமா ?

---

*மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க யாற்றப்பெற்றது.

1992 செப்டம்பர் 24]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், பிற்பட்டோர் நலன் மற்றும் மீனளத்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இத்தகைய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. கலியபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் திட்டம் இல்லை என்று கூறினார்கள். எனது தொகுதியில் அடங்கிய தோகூர், திருவாலம்—பொழில், அந்திலி ஆகிய பகுதிகளில் வாழும் முந்நூறுக்கு மேற்பட்ட உள்நாட்டு மீனவக் குடும்பங்கள் மிகவும் ஏழ்மைநிலையில் வாழ்பவர்கள், அவர்களுக்கு எந்தவிதமான சொந்த இடமும் கிடையாது. தற்போது தனியாரிடத்தில், புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கிறார்கள். ஒரு சிறிய வீட்டில் இரண்டு, மூன்று குடும்பங்கள் இருந்து கொண்டு கஷ்டப்படுகிறார்கள். ஆகையால், கோடானு கோடி ஏழை எளியோர் உள்ளங்களில் இதயதெய்வமாக இருக்கிற, அப்படிப்பட்ட குடும்பங்களின் இல்லங்களில் ஒளியேற்றி வைத்து கொண்டிருக்கிற, புரட்சித் தலைவியின் ஆட்சியில், அந்த ஏழை எளியோருக்கு குடியிருக்க பட்டா நிலம் வழங்கி, எந்தவகையிலாவது வீடு கட்டித் தரவோ அல்லது வீடு கட்டுவதற்கு கடன் வசதி செய்து தரவோ அமைச்சர் நடவடிக்கை எடுக்க ஆவன செய்வரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் 180 கடலோர கிராமங்கங்களில் 13,862 வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன. பொதுவாக உள்நாட்டு மீனவர்களைப் பொறுத்தவரையிலே அவர்கள் பாதுகாப்பான ஒரு சூழ்நிலையிலே வாழ்ந்து வருகின்றனர். ஆனால் கடலோர கிராமங்களில் வாழும் மீனவர்கள் இயற்கையின் சீற்றத்திற்கு அடிக்கடி உள்ளாகிற காரணத்தினால், அவர்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்க வேண்டியது அரசின் தலையாய கடமையாகும். அந்த வகையிலே, கடலோர கிராமங்களில் வாழுகிற மீனவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு இலவசமாக வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. அதேபோன்று, இலவசமாக வீட்டுமனை வேண்டுமென்று ஒரு கோரிக்கையினை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோறியிருந்தார்கள். இலவசமாக மனை அளிக்கும்திட்டம் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர், திரு. ஆர். கோடிமாரி. இது திருவையாறு தொகுதி சம்பந்தப்பட்டது.

திரு. ஆர். கோடிமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கும் ஏழை மீனவர்களுந்கு முழுமையாக வீட்டுவசதி செய்ய அரசிடம் என்ன திட்டம் உள்ளது என்பதையும், எவ்வளவு சதவிகிதம் மீனவர்களுக்கு தற்போது வீடு கட்டிக் கொடுக்க உள்ளது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அறிவிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது தாயுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், மீனவர்கள்பால் அன்பு கொண்டு, வருடந்தோறும் இரண்டாயிரம் வீடுகள் கட்டித்தர உத்தரவிட்டுள்ளார்கள். இந்த அடிப்படையில் 1992-93-ஆம் ஆண்டிற்குள் இரண்டாயிரம் வீடுகள் இலவசமாகக் கட்டித்தரப் தரப்படுகிறது. சுமார் 442 கிராமங்களிலே வசிக்கும் மீனவர்களுக்கு, இதுவரையிலே 180 கிராமங்ளுக்கு இலவசமாக 13,862 வீடுகள் கட்டித் தரப்பட்டிருக்கின்றன. இன்னும் பல கிராமங்களில் இந்தத் திட்டம் நிறைவு செய்யப்படவிருக்கிறது, அந்த வகையில் கணக்கை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம், அது வந்தவுடன் அட்லீஸ்ட் 'பேஸ்டு மானரிலானது இதைசெய்யலாம் என்று இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 80 திரு. ஏ.எம். பரமசிவன், மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர்.

80—

வாடிப்பட்டித் தாலுக்காவில் அரசு தொழில் பேட்டை

9074 திரு. ஏ. எம். பரமசிவன்:

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்கண்ட வினாக்களுகு விடையளிப்பாரா;

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகாவில் சிறு தொழில் துவங்க முனைவோரை ஊக்குவிக்கும் வகையில் அரசு தொழில் பேட்டை உருவாக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு.எஸ்.நாகூர் மீரான், ஊரகத்தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகாவில் தொழிற்பேட்டை அமைக்க குறைந்த பட்சம் 10 தொழில் முனைவோர்கள் முன் வருவார்களேயானால் சிட்கோ உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு.ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம் வாடிப்பட்டி பிற்பட்ட பகுதியாக இருக்கிறது. அது தொழில் பகுதியாக அறிவிக்கப்பட்ட காரணத்தால் அங்கு பத்து பேர்கள் சிறு தொழில் துவங்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அரசு அங்கே தொழிற்பேட்டை அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியபடி அந்த பத்து பேர்களும் உரிய விண்ணப்பங்களை அளிப்பார்